## நகர் மன்ற அவசரக்கூட்டப்பொருள்

2019ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16.08.2019ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 04.30 மணியளவில் கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள அவசரக் கூட்டத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் 1**

இந்நகராட்சியில் புதிய பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வந்த அம்மா உணவகத்தில் சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டுவந்த உணவு சமைக்க பயன்படுத்தப்படும் பாய்லர் (Boiler) மிகவும் பழுதாகியும், மீண்டும் அதை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாலும் மேற்படி பழைய பாய்லரை மாற்றிவிட்டு முற்றிலும் புதியதாக இரண்டு Layer Steel மற்றும் நவீன பாய்லர் அமைத்தும் மற்றும் அதன் இதர அமைப்பான பைப் லைன், வால்வு, மற்றும் Stand போன்ற சாதனங்கள் பொறுத்த ஆக கூடுதல் தொகை ரூ.1,30,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்

(ந.க.எண். 1324/2014/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :-547** **நாள் 16.08.2019**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

ஒம் /– திரு.ந.குமரன்
ஆணையர்
கூத்தாநல்லூர் நகராட்சி

/ உ.ந.உ.ப/

ஆணையர்
கூத்தாநல்லூர் நகராட்சி

## நகர் மன்ற சாதாரண கூட்டப்பொருள்

2019ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29.08.2019ம் தேதி வியாழக்கிழமை மாலை 04.30 மணியளவில் கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள சாதாரணக் கூட்டத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் 1**

நகராட்சி ஆணையர் அவர்களது ஜீலை 2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 548** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண் 2**

நகராட்சி பொறியாளர் அவர்களது ஜீலை 2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 549** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- பதிவு செய்யப்பட்டது**

**பொருள் எண் 3**

தமிழக அரசு ஆணை ( நிலை) எண் 238 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மாந4) நாள் 01.10.1997ல் ஒவ்வொரு ஆண்டும் நகராட்சியில் பணிபுரியும் ஓட்டுனர்களின் பணிக்காலத்தில் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் விபத்துகள் ஏதும் ஏற்படுத்தாமல் பணிபுரிந்துள்ள தகுதியுள்ள ஓட்டுனர்களுககு தங்கபதக்கம் மற்றும் நற்சான்று வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது. தகுதியுள்ள ஓட்டுனர்களுக்கு வழங்கப்படும் தங்கபதக்கம் 4 கிராம் அளவில் (22 காரட்) இருக்கப்பட வேண்டும் என்றும் மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 4 கிராம் அளவில் இரண்டு தங்கபதக்கம் வாங்கும் உத்தேச செலவின தொகை ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 560/2019/சி1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 550** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண் 4**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பேருந்து நிறுத்தப் பயணிகள் நிழற்குடைகள் கீழ்கண்டவாறு உள்ளது,. கோரையாறு, வஉசி காலனி, மரக்கடை மெயின் ரோடு, திருவாரூர் மெயின் ரோடு (போலீஸ் ஸ்டேசன் எதிரில்), திருவாரூர் மெயின் ரோடு (பூதமங்கலம் அருகில்), மேலபணங்காட்டாங்குடி, கொரடாச்சேரி ரோடு, லெட்சுமாங்குடி பாலம், ஆஸ்பத்திரி ரோடு, பாய்க்காரத்தெரு, ரேடியோ பார்க், புதுப்பாலம், நாகங்குடி ஆகிய பேருந்து நிலையங்கள் பழுதாகி மேற்கூரைகள் பெயர்ந்தும் சிதிலமடைந்தும் உள்ளது. மராமத்து பணிகள் செய்து வர்ணங்கள் அடித்து புதுப்பித்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் மேற்கொள்ளலாம்

(ந.க.எண். 847/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 551** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 5**

இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2015-16ம் ஆண்டில் 872 தனிநபர் கழிப்பிடம், 2018-19ல் 408 தனிநபர் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது, இதில் 35 வீடுகளுக்கான கழிப்பிடங்கள் தனிநபர்களால் கட்ட இயலாத நிலையில் அந்தந்த பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் கீழ்கண்ட பொது கழிப்பிடங்களை பயன்படுத்தி வருகிறார்கள். மரக்கடை, அவ்வை காலனி, அக்கரை புதுத்தெரு, காடுவெட்டித்தெரு, சின்ன கூத்தாநல்லூர், வஉசி காலனி, புளியங்குடி, கோரையாறு நடுத்தெரு மற்றும் கோரையாறு வடக்கு தெரு, அய்யன் தோட்டச்சேரி, வள்ளுவர் காலனி, குனுக்கடி, மேல்கொண்டாழி, காடுவெட்டி தெரு, கோரையாறு நடுத்தெரு ஆகிய 15 கழிப்பிடங்களில் காடுவெட்டி தெரு, கோரையாறு நடுத்தெரு இரண்டு கழிப்பிடங்கள் அபாயகரமான நிலையில் இருந்ததால் இடித்து அப்புறப்படுத்தப்பட்டது. மேலும் 13 கழிப்பிடங்களை பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் மராமத்து பணிகள் செய்து வர்ணங்கள் அடித்து புதுப்பித்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.8,30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் மேற்கொள்ளலாம்

(ந.க.எண். 848/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 552** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 6**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுடுகாடுகள் கீழ்கண்டவாறு உள்ளது,. கோரையாறு - 2 எண்ணம், மரக்கடை பாலம் 1 எண்ணம், கொரடாச்சேரி ரோடு 1 எண்ணம், மாதா கோவில் அருகில் 1 எண்ணம், லெட்சுமாங்குடி மேலத்தெரு 1 எண்ணம், பணங்காட்டாங்குடி, 1 எண்ணம் மற்றும கீழபணங்காட்டாங்குடி, குனுக்கடி, புளியங்குடி சிவன் கோவில் தெரு, மேல்கொண்டாழி, அக்கரை புதுத்தெரு, பண்டுதக்குடி, நாகங்குடி , சுடுகாடுகள் பழுதாகி மேற்கூரைகள் பெயர்ந்தும் சிதிலமடைந்தும் உள்ளது. மராமத்து பணிகள் செய்து வர்ணங்கள் அடித்து புதுப்பித்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் மேற்கொள்ளலாம்

(ந.க.எண். 846/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 553** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 7**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 18ல் ரஹ்மானியா தெரு முடியும் சாலை அருகில் உள்ள 80 மீட்டருக்கான மண்சாலை தற்போது பெய்த மழையில் பழுதாகி மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மேற்படி இடத்தில் புதிய சிமெண்ட் காங்கிரிட் சாலை அமைக்க ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 3.50 இலட்சததிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் மேற்கொள்ளலாம்

(ந.க.எண். 845/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 554** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 8**

இந்நகராட்சிக்குட்பட்ட வடபாதிமங்கலம் சாலையில் நகராட்சி சேமநல விடுதி அருகில் உள்ள ரேடியோ பார்க்கினை மேம்பாடு செய்யவும், ஊஞ்சல், சருக்கு விளையாட்டு மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்கி பொருத்திட ஆகும் மதிப்பீடு ரூ.6,00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் மேற்கொள்ளலாம்

(ந.க.எண். 844/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 555** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 9**

இந்நகராட்சியின் பராமரிப்பிலும், செயல்பாட்டிலும் இருந்துவரும் அம்மா உணவகத்தில் உள்ள கிரைண்டர், மிக்ஸி, பிரிட்ஜ், சீலிங் பேன், மின்விளக்குகள் பழுதாகி உள்ளதை புதியதாக மாற்றவும், உணவக கட்டிடங்கள் தரை பெயர்ந்து உள்ள பகுதிகளில் மராமத்து பணிகள் மேற்கொள்ளவும், வர்ணம் பூசவும், மழைநீர் சேகரிப்பு அமைப்பு மற்றும் கழிவுநீர் கட்டமைப்பு வசதிகள், கதவுகள் போடுதல் போன்ற இன்ன பிற பணிகள் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 843/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 556** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 10**

இந்நகராட்சி பகுதிகளில் உள்ள தெருக்களில் உள்ள மொத்தம் 24 வார்டுகளிலும் மொத்தம் 136 இந்தியா மார்க் II போர்வெல் பம்ப் இயங்கி வருகிறது. மேலும் நகர் பகுதிகளிலும் இந்நகரின் பிற குடிசை பகுதிகளிலும் 137 பொது குழாய் அமைக்கப்பட்டு மக்களுக்கு போதுமான அளவிலான தினசரி பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி 136 இந்தியா மார்க் II போர்வெல் பம்ப், உள்ள இடங்களில் பட்டியலில் கண்டுள்ள இந்தியா மார்க் II மேடைகள் யாவும் மிகவும் சிதிலமடைந்தும், சேதமாகியும் அசுத்த நிலையிலும் உள்ளது. மேலும் மேற்கண்ட தற்போது பாதிப்படைந்த நிலையில் உள்ள இந்தியா மார்க் II குழாய் அருகில் தமிழ்நாடு அரசின் சிறப்பு திட்டமான மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தும் விதத்தில் மழைநீர் சேகரிப்பு அமைக்கவும் இந்தியா மார்க் II மேடைகள் பராமரிக்கவும் ஆக கூடுதல் செலவினம் ரூ 2,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்

(ந.க.எண். 842/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 557** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 11**

இந்நகராட்சிக்குட்பட்ட சிறிய மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளான கோரையாறு, தோட்டச்சேரி, நாகங்குடி ஆகிய பகுதிகளிலிருந்து அப்பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தினசரி வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் தேக்க தொட்டிகளை பராமரித்து, சுத்தம் செய்து பழுதுகள் நீக்கி புதிய வர்ணம் பூசவும்,இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்

(ந.க.எண். 840/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 558** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 12**

இந்நகராட்சி பகுதிகளில் உள்ள தெருக்களில் உள்ள மொத்தம் 24 வார்டுகளிலும் மொத்தம் 136 இந்தியா மார்க் II போர்வெல் பம்ப் இயங்கி வருகிறது. மேலும் நகர் பகுதிகளிலும் இந்நகரின் பிற குடிசை பகுதிகளிலும் 137 பொது குழாய் அமைப்பதற்கு மக்களுக்கு போதுமான அளவிலான தினசரி பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி 137 பொதுக்குழாய் உள்ள இடங்களில் பட்டியலில் கண்டுள்ள பொதுக்குழாய் மேடைகள் யாவும் மிகவும் சிதிலமடைந்தும், சேதமாகியும் அசுத்த நிலையிலும் உள்ளது. மேலும் மேற்கண்ட பொதுக்குழாய் அருகில் தமிழ்நாடு அரசின் சிறப்பு திட்டமான மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தும் விதத்தில் மழைநீர் சேகரிப்பு அமைக்கவும் தற்போது பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக்குழாய் மேடைகள் பராமரிக்க ஆக கூடுதல் செலவினம் ரூ 2,00,000. /-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்

(ந.க.எண். 841/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 559** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 13**

இந்நகராட்சி பழைய அலுவலக குடிநீர் நீரேற்றும் மோட்டார் அறை, மற்றும் மேல்கொண்டாழி மோட்டார் அறையில் இயங்கி வந்த 20 HP Submersible Motor பழுதடைந்துள்ளதை சீர் செய்து பராமரிப்பு செய்யும் பணிக்கு 14.08.2018 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.வி.எழில்மாறன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி | 94470 | 94440 | 0.03% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.பி.செந்தில்நாதன் ஒப்பந்ததாரர் மரக்கடை லெட்சுமாங்குடி | 94470 | 94545 | 0.08% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.வி.எழில்மாறன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.03% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைந்த ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.

(ந.க.எண். 733/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 560** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- ஏற்கப்பட்டது**

**பொருள் எண் 14**

இந்நகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகத்தில் உள்ள பாய்லர் புதியதாக மாற்றி அமைக்கும் பணிக்கு 29.08.2019 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூன்று ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | பிரம்மா இன்டஸ்ட்ரீஸ் திருச்சி | 1,30,000 | 1,26,909 |
| 2 | கோவை ஹோட்டல் எக்யூப்மெண்ட்ஸ் கோயம்புத்தூர் | 1,30,000 | 1,39,299 |
| 3 | கோயம்புத்தூர் கிச்சன் எக்யூப்மெண்ட்ஸ் கோயம்புத்தூர் | 1,30,000 | 1,48,916 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள பிரம்மா இன்டஸ்ட்ரீஸ் திருச்சி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண். 1324/2014/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 561** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- ஏற்கப்பட்டது**

**பொருள் எண் 15**

இந்நகராட்சி பகுதியில் குடிநீர் பராமரிப்பிற்காக புதிய Rewinding 15 HP Submersible Motor, 4 sqmm cable, 3" GI Pipe, 3" coupling, 3" GI Bend, 3" Green wire வாங்கும் பணிக்கு 14.08.2018 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.வி.எழில்மாறன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி | 78343 | 78309 | 0.04% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.பி.செந்தில்நாதன் ஒப்பந்ததாரர் மரக்கடை லெட்சுமாங்குடி | 78343 | 78390 | 0.06% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.வி.எழில்மாறன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.08% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைந்த ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.

(ந.க.எண்.734/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 562** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- ஏற்கப்பட்டது**

.

**பொருள் எண் 16**

இந்நகராட்சி அல்லிக்கேணி விளையாட்டு மைதானம் அருகில் உயர் கோபுர மின்விளக்குகள் அனைத்தும் புதிதாக மாற்றும் பணிக்கு 05.08.2018 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.சபரி எலக்ட்ரிக்கல்ஸ் சென்னை | 30116.80 | 120440 | 0.02% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.பகவதி ஏஜென்சீஸ் மன்னார்குடி | 30116.80 | 120480 | 0.01% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.சபரி எலக்ட்ரிக்கல்ஸ் சென்னை என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.02% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண். 850/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 563** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- ஏற்கப்பட்டது**

**பொருள் எண் 17**

கூத்தாநல்லூர் புதிய நகராட்சி அலுவலக கட்டிட வளாகத்தில் கூடுதல் பணிகளாக ஜெனரேட்டர் மற்றும் மின்சார வசதிக்காக GI Sheet, Change over Switch, EB Board, Executive table, Screen Arrangements, Office Name Board அமைக்கும் பணிக்கு 14.08.2018 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.பாலமுருகன் ஒப்பந்ததாரர் மன்னார்குடி | 752588 | 752465 | 0.02% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.எஸ் மோகன் ஒப்பந்ததாரர் மன்னார்குடி | 752588 | 752651 | 0.01% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.பாலமுருகன் ஒப்பந்ததாரர் மன்னார்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.02% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண். 732/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 564** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- ஏற்கப்பட்டது**

**பொருள் எண் 18**

இந்நகராட்சிக்குட்பட்ட அப்துல் ரஹ்மான் ரோடு, கோரையாறு, வஉசி காலனி, நாகங்குடி மற்றும் அன்வாரியா தெரு ஆகிய இடங்களில் உள்ள இந்தியா மார்க் II பம்புகளில் உள்ள சிலிண்டர், Hand set, connecting Rod, 32 Pipe மற்றும் தளம் அமைக்கும் பணிக்கு 14.08.2018 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.வி.எழில்மாறன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி | 194550 | 194510 | 0.02% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.பி.செந்தில்நாதன் ஒப்பந்ததாரர் மரக்கடை லெட்சுமாங்குடி | 194550 | 194630 | 0.04% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.வி.எழில்மாறன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.02% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண். 565/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 565** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- ஏற்கப்பட்டது**

**பொருள் எண் 19**

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் இயங்கி வரும் கணிணிகள் மூலம் 9 எண்ணம் பிரிண்டர்கள் மூலம் பிரிண்ட் எடுத்து பணி பார்க்கப்பட்டு வருகிறது. மேற்படி பிரிண்ட் எடுக்க டோனர்கள் இல்லாததால் 12A டோனர்கள் 25 எண்ணம், 88A டோனர்கள் 10 எண்ணம், Brother Printer டோனர் 2 எண்ணம், Brother Doner dram- 1 No. Datmatrix Printer Ribbon - 20 எண்ணம் ஆக அனைத்து வகையான டோனர்கள் வாங்கி பயன்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 851/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 566** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- ஏற்கப்பட்டது**

**பொருள் எண் 20**

இந்நகராட்சிக்குட்பட்ட கொரடாச்சேரி ரோடு பகிர்மான குழாய், கோரையாறு, வஉசி காலனி, செல்வி நகர் ஆகிய இடங்களில் உள்ள பாலத்தின் கீழ் பகிர்மான குழாய் பழுது நீக்கம், புதிய அலுவலக கட்டிடத்திற்கு புதிய தற்காலிக மின்வயர் அமைக்கும் பணிக்கு 14.08.2018 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்தியா எலக்ட்ரிக்கல்ஸ் லெட்சுமாங்குடி | 92,393 | 92,299 | 0.10% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | பாரத் ஏஜென்சீஸ் லெட்சுமாங்குடி | 92,393 | 92,635 | 0.26% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள இந்தியா எலக்ட்ரிக்கல்ஸ் லெட்சுமாங்குடி என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.10% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண்.735/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 567** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- ஏற்கப்பட்டது**

**பொருள் எண் 21**

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஜெனரேட்டர், அம்மா உணவக கிரைண்டர், நாகங்குடி 1 HP மோட்டார் பழுது நீக்கம், மரக்கடை கீழத்தெரு சிவன் கோவில் அருகில் மின்சாதன பொருட்கள் அமைக்கும் பணிகளுக்கும் 14.08.2018 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.வி.எழில்மாறன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி | 29800 | 29795 | 0.02% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.பி.செந்தில்நாதன் ஒப்பந்ததாரர் மரக்கடை லெட்சுமாங்குடி | 29800 | 29826 | 0.09% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.வி.எழில்மாறன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.02% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண்.731/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 568** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- ஏற்கப்பட்டது**

**பொருள் எண் 22**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மற்றும் அலுவலகங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உருவாக்கிட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளுக்கினங்க முதல் கட்டமாக நகராட்சி புதிய அலுவலக கட்டிடம், நகராட்சி பழைய அலுவலக கட்டிடம், இரண்டு மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டிடம், அம்மா உணவக கட்டிடம், புதிய பேருந்து நிலையம், அலுவலக பின்புறமுள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி, ரேடியோ பார்க், தாய் சேய் நல விடுதி, மாட்டிறைச்சி கூடம், ரேடியோ பார்க் MCC கட்டிடம், ஆகிய கட்டிடங்களுக்கு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உருவாக்க ஆகும் மதிப்பீடு ரூ.2,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்

(ந.க.எண்.841/2019/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண்:- 569** **நாள் 29.08.2019**

**அலுவலக குறிப்பு:- ஏற்கப்பட்டது**